மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம்மூலம் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன்.

(ஈ) தளி சட்டமன்றத் தொகுதி, Zika Virus காய்ச்சல் பரவுதலையும் மற்றும் பொள்ளாச்சி தொகுதி, கேரள மாநில எல்லையோரப் பகுதிகளில் காய்ச்சல் பரவுதலையும் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள்.*

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதியில், தளி ஒன்றியம், நாட்ராம்பாளையம் என்ற கிராமம் Zika virus காய்ச்சலால் தாக்கப்பட்டிருக்கிறது. அந்த நோய் தாக்கப்பட்டவர்களை நம்முடைய Health Secretary அவர்கள் நேரடியாகச் சென்று பார்வையிட்டிருக்கிறார். காய்ச்சல் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இந்தக் காய்ச்சல் வந்திருப்பதால் அந்தப் பகுதி மக்கள் அச்சத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே, அதனைத் தடுப்பதற்கு இந்த அரசு என்ன முயற்சி எடுத்திருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு ஒரு மருத்துவக் குழுவை அமைத்து, அந்தப் பகுதி மக்களின் அச்சத்தினைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல இந்தக் காய்ச்சல் ஏற்கெனவே . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஒய். பிரகாஷ், போதும் உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) Zika virus நோய் தானே? மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு)மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

***மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியில், ஆனைமலை*

2017 ஜூலை 11] [முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்]

ஒன்றியம், பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், கிணத்துக்கடவு, மதுக்கரை ஆகிய பகுதிகளெல்லாம் கேரள மாநில எல்லையிலுள்ள பகுதிகள். கேரள மாநில மக்கள் இங்கு வந்து செல்வதும், இந்தப் பகுதி மக்கள் கேரள மாநிலத்திற்கு சென்று வருகின்ற சூழ்நிலையிலும், கேரள மாநிலத்தில் பரவிய காய்ச்சல் லேசாக இந்தப் பகுதியிலே புகுந்திருக்கிறது. இதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்காக, இன்றைக்கு பொது சுகாதாரத் துறை இயக்குநர் அவர்கள்கூட கோவைக்குச் சென்று இருப்பதாக நான் அறிகிறேன். மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வாரத்தில் ஏதாவது ஒரு நாள் அங்கு வந்து முகாமிட்டு, தீவிர கவனம் செலுத்தி, இந்தக் காய்ச்சலை அடியோடு ஒழிப்பதற்கும், மேற்கொண்டு பரவாமல் தடுப்பதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு புயல் வேகத்தில் பணிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. டி.ஆர்.பி. ராஜா, இப்படியெல்லாம் என்னை வற்புறுத்தாதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் mention செய்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் அவையை நடத்துவதா அல்லது உங்களின் பேச்சைக் கேட்பதா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) 89 உறுப்பினர்களுக்கும் நீங்களே recommend செய்கிறீர்கள். நான் எதை எடுத்துக்கொள்ள முடியும்? நீங்கள் கொடுப்பதில் ஒன்று அல்லது இரண்டு அறிவிப்புகளைத்தான் எடுத்துக்கொள்ள முடியும். தினந்தோறும் எப்படி எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ள முடியும்? மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்தப் பருவக் காலங்களில் communicable diseases என்று சொல்லக்கூடிய அனைத்து வகையான காய்ச்சல்களான சிக்–குன்–குனியா, டெங்கு, பன்றிக் காய்ச்சல் (swine flu) அல்லது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

குறிப்பிட்டதுபோல, இப்போது அறியப்பட்ட Zika virus காய்ச்சல் போன்றவற்றை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தீவிரமாகக் கண்காணித்துக் கொண்டு வருகிறது.

முற்பகல் 11–30

2016–ல் உலகத்தில் உள்ள 60 நாடுகளில் Zika virus அச்சுறுத்தல் செய்திகள் வந்தவுடனே, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு ஓர் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. அன்றிலிருந்து Acute Febrile Illness Study என்று அதுகுறித்து தீவிரமாகக் கண்காணித்துக் கொண்டிருக்கிறோம். அப்படி நாம் கண்காணித்துக் கொண்டிருப்பதன் அடிப்படையில்தான், மாண்புமிகு தளி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, தாங்கள் சார்ந்திருக்கக்கூடிய எல்லையோரப் பகுதிகளில் இருக்கின்ற ஒரு remote village அஞ்செட்டி என்ற குக்கிராமத்தில் இருப்பவருக்கு காய்ச்சல் இருப்பது ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கண்டறியப்படுகிறது. அந்த நோயாளிக்கு நாம் blood test எடுத்தபோது, அவருக்கு சிக்–குன்–குனியா negative வருகிறது; டெங்கு negative வருகிறது; மலேரியா negative வருகிறது; Leptospirosis negative வருகிறது; தொடர்ந்து அவருக்குக் காய்ச்சல் இருக்கிறது. அதன் அடிப்படையில்தான் அதற்குப் பின்னால் அவருக்கு Zika virus காய்ச்சலாக இருக்குமா என்று புனேயில் இருக்கக்கூடிய மத்திய வைராலஜி நிறுவனத்திற்கு ஆய்விற்கு அனுப்பியபோது அங்கே சிறுநீரக மற்றும் இரத்தப் பரிசோதனையில் அவருக்கு காய்ச்சல் இருப்பதாக உறுதி செய்யப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இவ்வளவு தீவிரமாகக் கண்காணித்துக் கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான் ஒரு கடைகோடி மலைக் காட்டுப் பகுதியில் இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையித்தில்கூட—நான் ஏற்கெனவே சொன்னதைப்போல், எந்த அரசு மருத்துவமனையிலும், ஆரம்ப சுகாதார நிலையத்திலும் காய்ச்சல் என்று வந்தால், அது என்ன காய்ச்சல் என்பதைக் கண்டுபிடிக்கக்கூடிய வசதி இருக்கிறது என்பதைப் பல முறை இந்த மாமன்றத்தில் நான் கூறி இருக்கின்றேன். அதன் அடிப்படையில் அது கண்டறியப்பட்டு அவர் இப்போது குணப்படுத்தப்பட்டிருக்கின்றார், அவர் நலமோடு இருக்கின்றார். நம்முடைய அரசுச் செயலாளர் அவர்களும் நேரடியாகத் தங்களுடைய தொகுதிக்கு வந்து ஆய்வினை மேற்கொண்டார்கள்.

2017 ஜுலை 11] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

ஆய்வு செய்வதற்கு புனேயில் மட்டுமல்ல, King Institute–லும் RTPCR என்ற method–ன்மூலம் ஆய்வு செய்வதற்கு எல்லா உபகரணங்களையும் நாம் தயார் நிலையில் வைத்திருக்கின்றோம். உலக அளவில் இருந்தாலும்கூட, இந்த Zika virus பற்றி நீங்கள் தயவுசெய்து அச்சம் கொள்ளவேண்டாம். டெங்கு, சிக்–குன்–குனியா போன்ற காய்ச்சல்களோடு ஒப்பிடும்போது இது ஒரு mild disease. உயிருக்கு எந்தவிதமாக ஆபத்தும் இந்த Zika virus–ஆல் ஏற்படாது என்பதை இந்த நேரத்தில் உறுதியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். அதுமட்டுமல்ல, இப்போது முதன்முதலாக ஒருவருக்கு வந்திருக்கின்றது. வேறு யாருக்கும் இந்த நோய் பரவுவதற்கு வாய்ப்பு இல்லாத அளவிற்கு 5 கிலோ மீட்டர் சுற்றளவில் surveillance, சிறப்பு மருத்துவக் குழுக்கள், கண்காணிப்புக் குழுக்கள் எல்லாம் போடப்பட்டுள்ளன.

மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்கள் சொன்னதைப்போல், கோயம்புத்தூரில் மட்டுமல்ல, கேரள எல்லையோரப் பகுதியிலும் காய்ச்சல் பரவுகிறது. மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் என்னிடத்திலே ஒரு கோரிக்கையைக் கொடுத்திருக்கிறார். 12 சுகாதார மாவட்டங்களில் டெங்கு காய்ச்சலினுடைய தாக்கம் இந்தப் பருவ காலகட்டத்தில் வரும். இப்போது இந்தத் தாக்கம் அதிகரிக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், அரசு ஒவ்வோர் இடத்திற்கும் ஒரு கூடுதல் இயக்குநரையும், இணை இயக்குநரையும் பிரத்யேகமாக நியமித்து, ஒவ்வொரு HODs–லும் தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொண்டு தீவிரமாகக் கண்காணித்துக் கொண்டிருக்கின்றது. தேவையான மருந்து, மாத்திரைகள் எல்லாம் கையிருப்பில் இருக்கின்றன. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடு கலந்தாலோசித்திருக்கின்றோம். அவர்களோடு இணைந்து multi–dimension–ல் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். தலைமைச் செயலாளர் அவர்கள் இன்றைக்குக்கூட Video Conference மூலம் ஆய்வு மேற்கொள்ளயிருக்கின்றார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. அரசு மிகக் கவனத்தோடு, தீவிரமாக, உன்னிப்போடு கண்காணித்துக் கொண்டிருக்கின்றது. தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி இயக்குநர் அவர்களையும் அறிவுறுத்தியுள்ளோம். Zika virus–ஐப் பொறுத்தவரையில் நிச்சயமாக அச்சம் தேவையில்லை. ஒருவருக்கு

வந்தது, அவரையும் உடனடியாகக் குணப்படுத்திவிட்டோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) குளச்சல் நகராட்சி, குப்பைகள் அகற்றப்படுதல் மற்றும் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்துதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், என்ன சொல்லுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் நகராட்சியில் 24 வார்டுகள், 27 ஆயிரம் மக்கள் தொகை. கடல் சார்ந்த பகுதி. சுமார் 6 மாதங்களாகக் குப்பைகள் அகற்றப்படாமல் துர்நாற்றம் ஏற்பட்டு, விஷக் காய்ச்சல் மற்றும் சுகாதாரக் கேடு ஏற்பட்டு மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். அங்கே இன்னும் பாதாளச் சாக்கடை வசதி செய்யப்படவில்லை. திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தின்மூலம் குளச்சல் உப்பளப் பகுதியில் இரண்டரை ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பகுதி வாய்க்கால் பகுதி, தண்ணீர் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி. பாம்பூரி வாய்க்கால் தோன்றக்கூடிய பகுதி. அது தகுதியான இடம் இல்லை. திடக் கழிவு செயல்படுகின்ற பகுதி சரியாக இல்லாத காரணத்தினால், அந்தப் பகுதியில் சுகாதாரப் பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. மக்கள் குடியிருக்கக்கூடிய பகுதி. அந்த இடத்திற்குப் பதிலாக வேறு ஓர் இடத்தை ஆய்வு செய்து திடக் கழிவுகளைப் போடுவதற்கான ஏற்பாடு செய்யாமல் இருந்தால் நிச்சயமாக அந்தப் பிரச்சினை முடிவுக்கு வராது. ஆகவே குளச்சல் நகரத்தைச் சுத்தமான நகரமாக மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். நகராட்சி அதிகாரிகள் அதற்குரிய எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் வேண்டுவது,* specific interest *எடுத்து, அந்த இடத்தைப் பார்வையிட்டு திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தைக் குளச்சல் நகராட்சிப் பகுதிக்கு தகுந்த இடத்தில் ஏற்படுத்திக் கொடுத்து, சுகாதாரத்தை மேம்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*